1995 ஏப்ரல் 28]

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. இராம. இராமநாதன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.*

திரு. இராம. இராமநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் பாதம்பணிந்து 1994-95-ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக குழுவின் இருநூற்று முப்பது, இருநூற்று முப்பத்தொன்று மற்றும் இருநூற்று முப்பத்திரெண்டாவது அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.*

8. அரசினர் சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) இந்தியக் கிருத்துவத் திருமண (மாற்றப்பட்ட மண்டலத்திற்கு நீட்டித்தல்) சட்டமுன் வடிவு, 1995.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்ட முன்வடிவுகள், அறிமுகம் செய்தல். 1995-ஆம் ஆண்டு இந்தியக் கிருத்துவத் திருமண (மாற்றப்பட்ட மண்டலத்திற்கு நீட்டித்தல்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"1995-ஆம் ஆண்டு இந்தியக் கிருத்துவத் திருமண (மாற்றப்பட்ட மண்டலத்திற்கு நீட்டித்தல்) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

(ஆ) சென்னைப் பெருநகர் பரப்பிட நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1995.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *1995-ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் பரப்பிட நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.*

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"1995-ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் பரப்பிட நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

பிற்பகல் 12-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*